اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ وَ الصَّلٰوةُ وَالسَّلَامُ عَلٰى سَيِّدِ الْمُرْسَلِيْنَ اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ ؕ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ؕ

# மதுபானத்தின் சீரழிவுகள்

மதுபானம் ஷைத்தானுடைய அருவருக்கத்தக்க வேலைகளில் உள்ளவையாகும். ஆகவே, இவைகளிலிருந்து தவிர்ந்துக் கொள்வது வெற்றியின் அடையாளமாகும். (சூரதுல் மாஇதா, ஆயத் 90, முலக்கஸ்) மதுபானம் உங்களுக்கிடையில் விரோதத்தையும், குரோதத்தையும் உண்டு பண்ணுகிறது. மேலும் அல்லாஹ் عَزَّوَجَلَّ வுடைய ஞாபகத்திலிருந்தும் தடுத்து விடுகிறது. (சூரதுல் மாஇதா, ஆயத் 91, முலக்கஸ்) **கண்மணி நாயகம்** صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم **அன்னவர்களின் 5 பொன்மொழிகள்:** (1) போதை ஏற்படுத்தும் ஒவ்வொரு பொருளும் மதுபானமாகும், மேலும் ஒவ்வொரு மதுபானமும் ஹராமாகும். (முஸ்லிம், பக்கம் 1109, ஹதீஸ் 2003) (2) அல்லாஹ் عَزَّوَجَلَّ மதுபானத்தின் மீதும், அதை பிழிபவன் மீதும், யாருக்காக பிழியப்படுகிறதோ அவன் மீதும், குடிப்பவன் மற்றும் குடிக்க வைப்பவன் மீதும், கொண்டு வருபவன் மற்றும் யாருக்காக கொண்டு வரப்படுகிறதோ அவன் மீதும், விற்பவன் மற்றும் வாங்குபவன் மீதும் மேலும் அதன் வருமானத்தால் சாப்பிடக்கூடிய அனைவர்கள் மீதும் சாபம் இடுகிறான். (அல்முஸ்தத்ரக், 5/199, ஹதீஸ் 7310) (3) மதுபானத்தை சுவற்றில் வீசி எறியுங்கள். ஏனெனில் இது அல்லாஹ் عَزَّوَجَلَّ மற்றும் மறுமை நாளின் மீது நம்பிக்கை கொள்ளாதவர்களின் குடிபானமாகும். (ஹில்யதுல் அவ்லியா, 6/159, ஹதீஸ் 8148) (4) குடிகாரன் மதுபானம் அருந்தும் நேரத்தில் அவன் முஃமினாக இருப்பதில்லை. (முஸ்லிம், பக்கம் 48, ஹதீஸ் 57) (5) மதுபானம் மிகப்பெரிய பாவமாகவும், அனைத்து பாவங்களின் வேராகவும் உள்ளது, மதுபானம் அருந்துபவன் தொழுகையை விட்டு விடுகிறான், மேலும் (சில நேரம்) தனது தாய், சாச்சி, மாமி போன்றோருடனும் விபச்சாரம் செய்து விடுகிறான். (மஜ்மஉZஸ் ஸவாஹித், 5/104, ஹதீஸ் 8174, மஃப்ஹூமன்) **மதுபானத்தின் 21 நஷ்டங்கள்:** ❁ மதுபானத்தின் மூலம் மனிதனின் நற்குணங்கள் சீரழிவதுடன் சமுதாயத்தின் மீதும் அதன் ஆழமான விளைவுகள் ஏற்படுகின்றன. ❁ மதுபானத்தின் மூலம் தீயச்செயல்கள் அதிகரிக்கின்றன. ❁ குடிகாரனுக்கு தனது மனிதர்கள் மற்றும் எதிரிகளைப் பற்றிய வேறுபாடு இருக்காது. ❁ பெற்றோர்கள் குடிப்பதால் பிள்ளைகள் மீது அதன் தாக்கம் ஏற்படுகிறது. ❁ மதுபானம் மனிதனின் புத்தியில் தவறான எண்ணத்தை ஏற்படுத்துகிறது. ❁ மதுபானம் சொத்துக்களை சீரழிப்பதோடு, வறுமையையும் ஏற்படுத்தி விடுகிறது. ❁ மதுபானம் சாப்பாட்டின் இன்பம் மற்றும் அழகான பேச்சுக்களை விட்டும் தடுக்கிறது. ❁ மதுபானம் தீயச்செயல்களின் திறவுகோலாகும் மேலும் குடிகாரனை அதிகமான பாவங்களின் பக்கம் ஈடுபடுத்தி விடுகிறது. ❁ இது குடிகாரனை விபச்சார சபைகளுக்கு இட்டுச் செல்வதோடு, அதன் துர்நாற்றம் அதை எழுதக்கூடிய மலக்குகளுக்கு சிரமத்தை ஏற்படுத்தி விடுகிறது. ❁ இது குடிகாரன் மீது வானங்களின் கதவுகளை மூட வைத்து விடுகிறது, 40 நாட்கள் வரை அவனது எந்த அமலும், துஆவும் உயர்த்தப்படுவதில்லை. ❁ இது குடிகாரனின் உயிர் மற்றும் ஈமானை ஆபத்தில் போட்டு விடுகிறது, இதனால் மரணிக்கும்போது ஈமான் பறிபோகும் அச்சமுள்ளது. ❁ ஆரம்பத்தில் மனிதனின் உடல் மதுபானத்தின் நஷ்டங்களை எதிர்கொள்கிறது. மேலும் குடிகாரனுக்கு சந்தோஷமும் கிடைக்கிறது. ஆனால் மிகவிரைவில் உடம்பின் உள்ளிருக்கும் தாங்கும் சக்தி முடிவடைந்து, தொடர்ச்சியாக கேடு விளைவிக்கின்ற அறிகுறிகள் வெளியாகின்றன. உதாரணமாக மதுபானத்தின் விளைவு மிக அதிகமாக கல்லீரலை தாக்கி, அது சுருங்கி விடுகிறது, சிறுநீரகம் மீது மேலதிக சுமை ஏற்பட்டு பாதிப்படைந்து விடுகிறது. அதிக மதுபானம் மூளையை வீக்கமடையச் செய்கிறது, நரம்புகளில் எரிச்சலை ஏற்படுத்தி கடைசியில் நரம்புகளை பலவீனமாக்கி, அழித்து விடுகிறது. இரப்பையில் வீக்கம் ஏற்படுகிறது, எலும்புகள் மென்மையாகவும், பலவீனமாகவும் ஆகி விடுகிறது, மதுபானம் உடம்பில் சேமித்துள்ள விட்டமின்களை அழித்து விடுகிறது, மேலும் அதன் காரணத்தால் விட்டமின் B மற்றும் C நாசமடைகிறது, மதுபானத்தோடு புகையிலை பாவிப்பதன் மூலம் அதன் விளைவுகள் மேலும் அதிகரிக்கின்றன், உயர் இரத்த அழுத்தம் (HIGH BLOOD PRESSURE), பக்கவாதம், மாரடைப்பு (HEART ATTACK), போன்ற நோய்கள் ஏற்பட அதிக வாய்ப்புண்டு, அதிக மதுபானம் களைப்பு, தலைவலி, குமட்டுதல் மற்றும் தீவிர தாகம் போன்றவற்றில் ஈடுபடுத்தி விடுகிறது, சிலசமயம் அதிக மதுபானத்தினால் இருதயம் மற்றும் சுவாச நிறுத்தம் ஏற்பட்டு திடீர் மரணமும் ஏற்படலாம். **குடிகாரனுக்கு உலகில் தண்டனை:** மதுபானம், அதை அருந்துபவன் மீது 80 கசையடிகளை கடமையாக்கி விடுகிறது. ஆக, அவன் இவ்வுலகில் இந்த தண்டனையை விட்டும் தப்பி விட்டால் கியாம நாளில் படைப்பினங்களுக்கு முன்னால் அவனுக்கு கசையடி வழங்கப்படும். **குடிகாரனுக்கு கப்றில் தண்டனை:** கப்றில் குடிகாரனின் முகம் கிப்லாவை விட்டும் திரும்பி விடும். (அல் கபாஇர், ஷர்ஹுல் கம்ர், பக்கம் 96) அவன் மீது இரண்டு பாம்புகள் சாட்டப்படும். அது அவனது இறைச்சியை கொத்தி கொத்தி சாப்பிடும். (ஷர்ஹுஸ் ஸுதூர், பக்கம் 172) **குடிகாரனுக்கு கியாம நாளில் தண்டனை:** குடிகாரன் கியாம நாளில் அவனது முகம் கறுத்த நிலையில் வருவான். நாவு நெஞ்சின் மீது தொங்கிக் கொண்டிருக்கும், எச்சில் வடிந்துக் கொண்டிருக்கும் மேலும் பார்க்கும் ஒவ்வொருவரும் அவனை வெறுப்பார்கள். (அல்காமிலு ஃபி முஹ்ஃபாஹிர் ரிஜால், 2/502) ❁ நெருப்பினாலான தூக்கில் தொங்க விடப்படும், தாகம் ஏற்படும்போது துர்நாற்றமுடைய வியர்வை அல்லது கொதிக்கும் நீரை குடிப்பதற்காக கொடுக்கப்படும், சாப்பிடுவதற்காக முட்கள் நிறைந்த மரத்தை கொடுக்கப்படும், காலில் நெருப்பினாலான காலணிகளை அணிந்திருப்பதால் மூளை கலங்கி, மூக்கு மற்றும் காதின் மூலம் வடிந்தோடும். ❁ குடிகாரன் நரகத்தில் ஃபிர்அவ்ன் மற்றும் ஹாமானின் அயல் வீட்டாளனாக இருப்பான். (நேகியோன்கி ஜZஸாயென் அவ்ர் குனாஹோன்கி சZஸாஹேன், பக்கம் 22 முதல் 31, முலக்கஸ்)

மதுபானம் மற்றும் ஏனைய பாவங்களை விட்டும் தவிர்ந்துக்கொள்ளவும் மேலும் ஸுன்னத்தான முறையில் வாழ்க்கையை அமைக்கவும் தஃவதே இஸ்லாமியின் மதனி சூழுலோடு ஒன்றிணைந்துக் கொள்ளுங்கள்